முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்
ஐ.டி.எண்.7/2024

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ஆம் தேதியில் திரு. நீலமேகம் என்பவரது வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி.A.K.நாசினி, Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.
Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 01.04.2026.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | நீலமேகம் |
| 2. | தந்தை பெயர் | : | முனிசாமி |
| 3. | தொழில் | : | |
| 4. | வயது | : | |
| 5. | முகவரி | : | |

**முதல் விசாரணை**:-

தொழிலாளர் தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில காணப்படும கையொப்பம் என்னுடையதுதான். நிர்வாகம் எனக்கு வழங்கிய அடையாள அட்டையின் நகல் **தொ.த.சா.ஆ.1**. நிர்வாகம் எனக்கு வழங்கிய ஊதிய ரசீதுகளின் நகல்கள் **தொ.த.சா.ஆ.2 வரிசைகள்**. 14.02.2021 தேதியிட்ட பொதுக்குழுவில் இயற்றப்பட்ட தீர்மானத்தின நகல **தொ.த.சா.ஆ.3.** 21.03.2021 தேதியிட்ட பொதுக்குழுவில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் நகல **தொ.த.சா.ஆ.4**. 29.03.2021 அன்று தொழிற்சங்கம் எழுப்பிய தொழிற்தாவாவின் நகல **தொ.த.சா.ஆ.5**. அந்த தொழிற்தாவாவில் நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையின் நகல **தொ.த.சா.ஆ.6**. நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரைக்கு தொழிற்சங்கம் தாக்கல் செய்த எதிர் உரையின் நகல **தொ.த.சா.ஆ.7**. 23.11.2022 அன்று தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கை **தொ.த.சா.ஆ.8**. 16.09.2021 அன்று தொழிற்சங்கம் எழுப்பிய தொழிற்தாவாவின் நகல **தொ.த.சா.ஆ.9**. அந்த தொழிற்தாவாவில் 28.02.2022 அன்று தொழிலாளர் உதவி ஆணையர்

பதிவு செய்த சமர முறிவு அறிக்கையின் நகல் **தொ.த.சா.ஆ.10**. 15.12.2023 அன்று தமிழக அரசு பிறப்பித்த அரசாணை எண்.676ன் நகல் **தொ.த.சா.ஆ.11**. 11.11.2024 அன்று தமிழக அரசு பிறப்பித்த அரசாணை எண்.808ன் நகல் **தொ.த.சா.ஆ.12**. 11.11.2024 அன்று தமிழக அரசு பிறப்பித்த அரசாணை எண்.809ன் நகல் **தொ.த.சா.ஆ.13**. தொழிற்சங்கம் எழுப்பிய சில கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் நீதிமன்ற தீர்ப்பிற்கு விட தேவையில்லை என்று அரசு ஆணை பிறப்பித்தது அதனை எதிர்த்து தொழிற்சங்கம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் தாக்கல் செய்யப்பட்ட சத்தியப்பிரமாண வாக்குமூலத்தின் நகல் **தொ.த.சா.ஆ.14**. 09.06.2022 அன்று தொழிற்சங்கம் எதிர்மனுதாரருக்கு பாதுகாக்கப்பட்ட தொழிலாளர் அந்தஸ்து வழங்கக்கோரி அனுப்பிய கடிதத்தின் நகல் **தொ.த.சா.ஆ.15**. 12.10.2022 அன்று மனுதாரர் தனது பணிநீக்கத்தை எதிர்த்து எழுப்பிய தொழிற்தாவாவின் நகல் **தொ.த.சா.ஆ.16**. அந்த தொழிற்தாவாவில் நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையின் நகல் **தொ.த.ச.ஆ.17**. தொழிற்தாவாவில் சமரசம் ஏற்படாததால் தொழிலாளர் உதவி ஆணையர் பதிவு செய்த சமரச முறிவு அறிக்கையின் நகல் **தொ.த.சா.ஆ.18**. மனுதாரர் தனது பணிநீக்கத்தை எதிர்த்து தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு 03.07.2025 அன்று எழுப்பிய தொழிற்தாவாவின் நகல் **தொ.த.சா.ஆ.19.**

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.04.02 10:21:59 +0530

Presiding Officer,
Principal Labour Court,
Vellore.